ராணி
காமிக்ஸ்
பழி
வாங்கும்
நாய்கள்

ராணி காமிக்ஸ்—195
(மாதம் இருமுறை இதழ்)
KK
ஆகஸ்டு 1—15
1992

அமெரிக்காவின் தென்மேற்குப் பகுதியில் உள்ள மாண்டனா என்ற பள்ளத்தாக்கில் எங்கு பார்த்தாலும் பச்சைப பசேலென புல்வெளிகள் அருகில் இருக்கும். பண்ணைக்காரர்கள் மந்தைகளை மாண்டனாவுக்கு ஓட்டிவருவது வழக்கம்.


டான் என்ற இளைஞன் தன் பண்ணை தீப்பிடித்து எரிந்துவிட்டதால் ஆட்டு மந்தைகளை ஓட்டிக்கொண்டு அமெரிக்காவின் வடக்கு பகுதி நோக்கி சென்றுகொண்டிருந்தான்.
ஆட்டு மந்தைக்கு நான்கைந்து நாய்கள்தான் காவல். மந்தையில் இருந்து ஆடுகள் தவறிவிடாமல் பாாததுக்கொள்வது நாய்களுடைய வேலை.


சீசர்தான் தலைவன்.
சீசர்! உன்னுடைய திறமையை பாராட்டுகிறேன்! ஆடுகளை மிகவும் கவனமாக பார்த்துக்கொள்கிறாய்...!


பள்ளத்தாக்குகள் வழியாக கொஞ்சம் கொஞ்சமாக வடக்குப் பகுதி நோக்கி நகர்ந்து கொண்டிருந்தார்கள். தொடர்ந்து பயணம் செய்து கொண்டிருந்ததால் களைப்பு ஏற்பட்டது.
ஓர் இடத்தில்–
ஆகா! இது அருமையான இடம்! ஆடுகளுக்கு புல் நிறைய இருக்கிறது! குடிக்க தண்ணீரும் அருகில் இருக்கிறது!
அவர்கள் தங்கியிருந்த அந்த இடம்தான் மாண்டனா பள்ளத்தாக்கு.

ஆனால–
ஜோ...! அங்கே பார்! எவனோ ஆண்டர்சன் இடத்தில் மந்தையை மேயவிட்டிருக்கிறான்!
இரண்டுபேர் டானை பார்த்தார்கள்.

ஆண்டர்சனிடம் போய் விசயத்தை சொல்வோமா?
சரி புறப்படலாம்

இருவரும் சிட்டாக பறந்தார்கள்.
அவனுக்கு என்ன தைரியம் இருக்க வேண்டும்!
ஆண்டாசன் ஆடுகளை எல்லாம அபகறித்துவிடப் போகிறார் பாரேன்!


ம்... விரைவாகப் போ!
அதற்குள் அவன் மந்தையை
ஓட்டிவிடப் போகிறான்!


அடுத்த சில நிமிடங்களில் இருவரும் ஆண்டர்சன் பண்ணைக்கு வந்தாாகள்.

ஜோ ஆண்டார்சனிடம் விசயத்தை விளக்கிக் கூறினான்.
அப்படியா! வா அவனை ஒருகை பார்ப்போம்!

அதேநேரம் பள்ளத்தாக்கில்—
சீசர்! இந்த இடம் நமக்கு பண்ணை அமைக்க வசதியாக இருக்கும். நாளை மரங்களை வெட்டி வீட்டைக கட்டிவிடுகிறேன்!

ஒரு நாள் இந்த
இடத்தை சொர்க்க
பூமியாக மாற்றிக்காட்டு
கிறேன் பார்!
லொள்...!
லொள்...!
சீசரும அவனுக்கு ஆதரவாக குரைத்தது.


அதன்பிறகு ஒரு
அழகான பெண்ணைப்
பார்த்து திருமணம்
செய்துகொள்ள
வேண்டும்! என்ன
சீசர்!
லொள்...!
லொள்...!
திடீரென்று சீசர் கலவரப்பட்டது.


அப்போது ஆண்டர்சன் அங்கே வந்தார். அதனால் சீசர் குரைத்திருக்கிறது.
சீசர்... பொறு! அவர்கள் என்னை பார்க்கத் தான் வருகிறார்கள்! யார் என்று கேட்போம்!

என் பெயர் தாமஸ் ஆண்டாசன்! நான்தான் இந்த இடத்திற்கு சொந்தக்காரன்!
என் பெயர் டான்! நான் இந்த இடம அரசாங்கத்துக்கு சொந்தமானது என்று நினைத்தேன்!
இருவரும் ஒருவரையொருவர் அறிமுகம் செய்துகொண்டார்கள்.


இரண்டு மாதங்களுக்குமுன் இநத இடத்தை நான் வாங்கிவிட்டேன். உன ஆடுகள் புல்லை தின்று தீர்த்துவிட்டன! பரவாயில்லை.


இங்கே இருந்து கிழக்கே போனால் அமரிலோ என்று ஓர் இடம் வரும். அங்கு உன் ஆடு களுக்கு நிறைய தீனி கிடைக்கும்!

வழி காட்டியமைக்கு ரொம்ப நன்றி ஆண்டர்சன்!
பரவாயில்லை! இடத்தை அடையாளம் காட்டுவதற்கு என்னுடைய ஆளை அனுப்பி வைக்கிறேன்!

ஆண்டர்சன் அனுப்பிய ஆளுடன் டான் கிழக்கு நோக்கிப் போனான்.
ஆண்டர்சன் எனக்கு உதவி செய்வார் என்று நான் நினைக்கவில்லை!
KK
போகப் போக நீங்களே பார்க்கத்தானே போகிறீர்கள்...!


ஒரு மணி நேர பயணத்திற்குப் பிறகு–
டான்! அதோ அந்த மலைக்கு பின்னால்தான் ஆண்டர்சன் சொன்ன இடம் இருக்கிறது! நான் வரட்டுமா?
ரொம்ப நன்றி!


மலையை கடந்துவந்த டானுக்கு அந்த இடத்தைப் பார்க்கவே மலைப்பாக இருந்தது.
சீசர்! ஆண்டர்சன் கூறியது உண்மைதான்! எவ்வளவு அருமையான இடம் பார்த்தாயா? நாம் இங்கேயே பண்ணை அமைக்கலாம்!


அதேநேரம் ஆண்டர்சன் பங்களாவில்-
ஏய்...! அநத ஆடு மேய்ப்பவனை கிறிஸ்டோபரின் நிலத்தில் பண்ணை போட அனுப்பிவிட்டேன்! இந்த கடிதத்தை கிறிஸ்டோபரிடம் சேர்த்துவிடு! மற்றதை அவன் கவனித்துக்கொள்வான்!
சரி! நான் புறப்படுகிறேன்!
கிறிஸ்டோபரும் ஒரு பெரிய புள்ளிதான்.

கடிதத்தை கிறிஸ்டோபரிடம் சேர்ப்பதற்காக ஆண்டர்சனின் ஆள் ஒருவன்,புறப்பட்டான்.
பாவம் அந்த ஆட்டுக்காரன்! கிறிஸ்டோபரிடம் வசமாக மாட்டிக் கொள்ளப் போகிறான்!

வழியில் அவனை, கிறிஸ்டோபரின் ஆட்கள் வழிமறித்தனர்.
ஏய்... நில்! யார் நீ?
நான் உங்கள் தலைவருக்கு முக்கிய செய்தி கொண்டு வந்திருக்கிறேன்!

டேய்...! எங்களை கொன்று போட்டுவிட்டு எங்கள் நிலங்களை ஆண்டர்சன எடுத்துக்கொள்ளலாம் என்று திட்டம் போட்டு அனுப்பியிருக்கிறானா?
இல்லை! என்னை நம்புங்கள்!

இல்லை! நீ எதுவும் பேசவேண்டாம்! ஆண்டர்சனுக்கு இன்னும் பழைய பகை மாறவில்லையா? அவன் கிறிஸ்டோபரை பழிவாங்க முயற்சிக்கிறான்!
ஆ... அம்மா!
டுமீல்...!
டுமீல்...!
கிறிஸ்டோபரின் ஆள் ஆண்டர்சன் ஆளை சுட்டுக்கொன்றான்.
அவன் செத்து விழுந்தான். அவர்கள் அவனை சோதித்துப் பார்த்தார்கள்.
எடுத்துப் படி! என்னவென்று பார்ப்போம்!
ஏய...! அவன் சொன்னதுபோல பாக்கெட்டில் ஏதோ கடிதம் இருக்கிறது'


ஏய்...! எவனோ ஆடு மேய்ப்பவன் நம் நிலத்தில் பண்ணை அமைக்க முயலுகிறானாம்...!
அப்படியா! வா கிறிஸ்டோபரிடம் போய் தகவல் சொல்லுவோம்!


இருவரும் கிறிஸ்டோபரின பண்ணைக்கு வந்தார்கள்.


அங்கே கிறிஸ்டோபர் கோழியை பிய்த்து தின்று கொண்டு இருந்தான்.
தலைவரே...!
ஏன்டா சாப்பிடும்போது தொந்தரவு செய்கிறாய்? என்ன விசயம்!

ஆண்டர்சனின் ஆள் ஒருவன இந்தக் கடிதத்தை கொண்டு வந்தான். நாங்கள் தவறாக நினைத்து அவனை கொன்றுவிட்டோம்!
பரவாயில்லை! முதலில் அதைக் கொடு பார்ப்போம்!

ஆண்டர்சன் எனக்கு அருமையான பரிசு ஒன்றை அனுப்பியிருக்கிறான்! ஒருவன் 500 ஆடுகளுடன் நம் இடத்தில் பண்ணை போட வந்திருக்கிறானாம! வாருங்கள் அவனை அடித்து விரட்டுவோம்!

உடனே கிறிஸ்டோபரின் ஆட்கள் புறப்பட்டார்கள்.


அவர்களுடன் கிறிஸ்டோபரும் புறப்பட்டான்.

வாருங்கள் புறப்படலாம்! என்ன தைரியமிருந்தால் என் நிலத்தில் பண்ணை போட முயலுவான்!


அதே நேரம்—
சீசர்! நான் அரிமலா நகருக்குச் சென்று நமக்குத் தேவையான பொருளை வாங்கி வருகிறேன்!

சீசர்! நீயும் மற்ற நாய்களும் சேர்ந்து ஆடுகளை கவனமாக பார்த்துக்கொள்!

சீசர்! ஆடுகள் மேய்ந்துகொண்டு எங்காவது போய் விடப் போகிறது! எச்சரிக்கையாக பார்த்துக் கொள்...!

இரண்டு மணி நேரத்துக்குப் பிறகு டான் அரிமலா நகருக்கு வந்தான்.
அடேயப்பா! எவ்வளவு நாளுக்குப் பிறகு ஒரு நகரை பார்த்திருக்கிறேன! வேண்டிய பொருளை இங்கே வாங்கிவிட வேண்டியதுதான்!

முதலில் நகர செரிப்பை பார்த்து அந்த இடத்தில் பண் ணை அமைக்க உத்தரவு வாங்கிக்கொள் வோம்!


டான் ஒருவரிடம் செரீப்பைப் பற்றி விசாரித்தான்.
செரீப் எங்கே இருக்கிறார்
செரீப்பா...! இங்கேயா? வா எல்லாவற்றையும் விவரமாக சொல்லுகிறேன்!

அவன் டானை அழைத்துக்கொண்டு ஒரு மதுக்கடைக்கு வந்தான்.
என் பெயர் பீட்டர்! அரிமலா நகருக்கு இரண்டு ஆண்டாக செரீப்பே கிடையாது!
இரண்டு வருடத் திற்குமுன் ஒரு செரீப் இருந்தார் ஐந்து வருடம் தொடர்ந்து அவர்தான் செரீப்பாக இருந்தார். மிகவும் நல்லவர்.

நகரில் உள்ள முக்கிய இடங்களை முரடர்களான ஆண்டர்சனும் கிறிஸ்டோபரும் குறைந்த விலைக்கு வாங்கினார்கள்!

அவர்கள் வாங்கிய இடத்தில் முக்கிய ஆறு ஒன்று ஓடிக்கொண்டிருந்தது. எல்லா பண்ணைகளுக்கும் அந்த ஆற்று நீர்தான் பயன்பட்டது!


ஆனால், ஆண்டர்சனும், கிறிஸ்டோபரும் தங்களுடைய நிலத்திலேயே ஆற்றை அணைகட்டி தடுத்துவிட்டார்கள்! மற்ற பண்ணைகள் தண்ணீர் இல்லாமல் வறண்டு போயின.

எல்லா பண்ணை முதலாளிகளும் செரீப்பிடம் வந்து முறையிட்டார்கள்.
நீங்கள்தான் எங்களுக்கு வாழ்வு கொடுக்க வேண்டும்!


கவலைப்படாதீர்கள்! நாளையே நான் அவர்களை சந்தித்து பேசுகிறேன். எப்படியும் உங்கள் பண்ணைக்கு தண்ணீர் விடச் சொல்லுகிறேன்!

அன்று இரவு— அலுவலகத்தில் செரீப் தன் வேலைகளை முடித்துவிட்டு வீட்டுக்கு வந்துகொண்டிருந்தார்


அப்போது– ஆண்டர்சனும், கிறிஸ்டோபரும் தெருவில் வந்து கொண்டிருந்த செரீப்பை சரமாரியாக சுட்டுவிட்டு மறைந்து போனார்கள்.
டுமீல்...!
டுமீல்...!
ஆ...! அம்மா...!

துப்பாக்கிச் சத்தம் கேட்டு அனைவரும் பதட்டத்துடன் ஓடிவந்தார்கள்.
ஆ...ஆ... ஆண்டர்சனும், கிறிஸ்டோபரும்தான் என்னை சுட்டுவிட்டு ஓடினார்கள்!


பீட்டர் பழைய கதையை டானுக்கு விளக்கிச் சொல்லிக் கொண்டிருந்தார்.
செரீப் இறந்தபிறகு எவரும செரீப் பதவிக்கு வர ஆசைப்படவில்லை!

ஏன் என்றால் அனைவருமே சாவுக்கு அஞ்சினார்கள். அதற்குள் ஆண்டர்சனும் கிறிஸ்டோபரும் மற்ற பண்ணைகளை அடிமாட்டு விலைக்கு வாங்கிவிட்டார்கள்!


இருவரும் ஒருவருக்கொருவர் உகவி செய்து மற்றவர்களை அழித்து முன்னுக்கு வந்து கொண்டிருந்தார்கள். திடீரென்று அவர்களுக்குள் யார் பெரியவன் என்ற போட்டி வநதுவிட்டது! அவ்வளவுதான் உடனே இருவரும் எதிரும் புதிருமாகி விட்டார்கள்!

இருவரும் அடிக்கடி மோதிக் கொண்டார்கள். நகரமே போர்க்களமாக மாறிவிட்டது...!இப்படி இருக்கும்போது செரீப் பதவிக்கு யார் வருவார்கள்!

டான் செரீப்பின் கதையை கேட்டுக்கொண்டிருந்ததில் தன் ஆட்டு மந்தையை சுத்தமாக மறந்து இருந்தான். திடீரென்று மநதை நினைவு வர பதட்டத்துடன் எழுநதான்.
டான்! நீ உன் மந்தையை கிறிஸ்டோபரின் இடத்தில் அல்லவா விட்டு வந்திருக்கிறாய்! ஆபத்தல்லவா...?
அடக் கடவுளே! அது கிறிஸ்டோபரின் நிலமா? அய்யோ என் ஆடுகள்!

ட ன், விசயத்தை கேள்விப்பட்டதுதான் தாமதம், உடனே குதிரை யில் ஏறி சிட்டாக பறந்தான்.
மந்தையின் காவலுக்கு சீசரை விட்டு வந்திருக் கிறேன். இருந்தாலும் பயமாக இருக்கிறது!


டான், தன் ஆட்டு மந்தை இருந்த இடத்திற்கு வந்து பார்த்து அப்படியே உறைந்து போனான்.
ஆ...! என் ஆடுகள்...! என் மந்தைகள்...!
ஆடுகள் அனைத்தும் சுருண்டு கிடந்தன.

அடப்பாவமே! காவலுக்கு இருந்த சீசரையும் மற்ற நாய்களையும் எங்கே காண வில்லை...!

பிரின்ஸ்...! உன்னை யார் சுட்டுக்
கொன்றது... சீசரையம் மற்ற
நாய்களை எங்கே? இது
கிறிஸ்டோபரின்
வேலைதான்!
பிரின்ஸ் என்ற நாய் செத்துக் கிடந்தது.

டான் தன் பெரும் சொத்துக்களான ஆட்டு மந்தையை பறி
கொடுத்துவிட்டு, கனத்த இதயத்தோடு மீண்டும் அரிமலாவுக்கு
வந்தான். நேராக மதுக் கடைக்கு வந்து வேதனை தீர
குடித்தான்.

அப்பொழுது அங்கே பீட்டர் வந்தார்.
டான்...! நடந்ததை
கேள்விப்பட்டேன!
என் வீட்டுக்கு வா!
வீட்டில் என் தங்கை நமக்காக
உணவு தயாரித்து
வைத்திருக்கிறாள்

டான் ஒரு மாறுதலுக்காக பீட்டருடன் வீட்டுக்கு வந்தான்
இவள்தான் என் தங்கை ஜெசி!
பள்ளியில் டீச்சராக இருக்கிறாள்! டான்...!
கூச்சப்படாமல் சாப்பிடு! இது உன வீடு
மாதிரி!
பீட்டரின் நட்பு டானுக்கு ஆறுதலாக இருந்தது.

பீட்டர்...! நானே அரிமலாவுக்கு செரீப்பாக இருந்து நகரை புதுப் பொழிவுடன் கொண்டுவர நினைக்கிறேன்!
டான் தன் எதிரிகளை பழிவாங்குவதற்காக செரீப் பதவியை தேர்ந்து எடுத்தான். தன்னை செரீப் அலுவலகத்துக்கு கூட்டிச் செல்ல கட்டளையிட்டான்.
KK


பீட்டர், டானை செரீப் அலுவலகத்துக்கு அழைத்துச் சென்றார்
இரண்டு வருடமாக பூட்டிக் கிடந்ததால் தூசியாக கிடக்கிறது!
பரவாயில்லை! இருங்கள்! நான் சுத்தம் செய்து வைத்து விடுகிறேன்'

அறை சுத்தம் செய்யப்பட்டதும் டான் செரீப் பதவியை ஏற்றுக்கொண்டான்.
டான! இது மிகவும் ஆபத்தான பதவி!
அதைப்பற்றி எனக்கு கவலையில்லை!


செரீப் அணியும் நட்சத்திரக் குறியை எடுத்து டான தன் சட்டையில் அணிந்து கொண்டான்.
இனி நான் யாருக்கும் பயப் படப் போவதில்லை! சட்டத்தை காக்க வேண்டியது என் பொறுப்பு: போதுமா?
டான் பதவிப்பிரமாணம் எடுத்துக்கொண்டான்.

மறுநாள்– டான் தெருவில் நடந்தபோது அனைவரும அவனை வியப்புடன் பாாததாாகள்.
ஏய்...! நம் நகருக்கு புதிய செரீப் வந்து விடடார்...!
நல்ல தைரியசாலிதான் போலிருக்கிறது

அரிமலா நகருக்கு இரண்டு ஆண்டுக்குப் பிறகு புதிய செரீப் வந்தி
ருக்கும் செய்தி திக்கெட்டும் பறந்தது. ஆண்டர்சனுக்கும் செய்தி
வநதது.
பாஸ்...! அந்த ஆடு மேய்ப்பவன் அரிமலா நகருக்கு செரீப் கிவிட்டான்!
அப்படியா! நம் ஆட்களை திரட்டு. அவன கதையை முடிக்க இதுதான் சரியான நேரம்!
செய்தி கிறிஸ்டோபரின் பண்ணைக்கும் சென்றது.
ஹா...ஹா...ஹா...! நம்மைப் பற்றி தெரிந்துகொண்டும் இப்படிச் செய் திருக்கிறானா? நம் ஆட்களை தயார் செய்! அரிமலாவுககுச் சென்று நாம் யார் என்பதை காட்டுவோம்!


அந்த ஆடு மேய்ப் பவனை அங்கேயே தூக்கிலிட வேண்டும். அதற்கு தேவை யான ஏற்பாடுகளை செய்!
ஓ.கே. பாஸ்'

அதேநேரம்– வரப்போகிற ஆபத்தை முன்பே தெரிந்துகொண்ட டான் அதைச் சமாளித்துக்கொள்ள தயாரானான் துப்பாக்கியில் துப்பாக்கிக் குண்டுகளை நிரப்பினான்

டான்! வெளியே போகவேண்டாம் உன்னைக் கொல்லுவதற்காக ஆண்டர்சனின் ஆட்கள் நான்கு பேர் மதுக் கடைக்கு வந்திருக்கிறார்கள்.
அதைத்தான நானும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்!

மதுக் கடையில்–
டேய்...! கடையை அடித்து நொறுக்குங்கடா...!
போங்கடா...! போய் உங்கள் செரீப்பிடம் சொல்லுங்கள்!
அவன் என்ன கிழித்துவிடுவானா!
ஆண்டர்சனின் ஆட்கள் செரீப்பை மதுக கடைக்கு வரவழைப்பதற்காக கலவரத்தை ஏற்படுத்தினார்கள்.

ஆனால்– அதற்கு அவசியமே இல்லாமல் டான் மதுக் கடைக்கு வந்தார்
யாரடா என்னை அழைத்தது....
டான் தைரியமாக அவர்களை நோக்கி வந்தான்.

உனக்காகத்தான் நாங்கள் காத்துக் கொண்டிருக்கிறோம்!

டான் ஒத்தையாக நின்றுகொண்டிருந்தான்.

உயிர் மேல உங்களுககு
ஆசை இல்லையா? பேசாமல்
போய்விடுங்கள்...!
அதற்குள் அவாகளில ஒருவன துப்பாக்கியை
எடுத்து டானை சுட முயனறான. டான விடுவானா எனன?

அதற்குள மின்னல்
வேகததில் அவன்
துப்பாக்கிகளை,
எகிறி கீழே விழ
வைததான.
ஆ...!
டுமீல ...!
டுமீல....!
டேய்! அவனை
சுட்டுக்
கொல்லுஙகடா

அடுத்தவனையும் டான் விடவில்லை.
யாரும் அசையாதீர்கள்! உங்கள் தலைவன் ஆண்டர்சனிடம் போய் சொல்லுங்கள்! இனி இங்கு வாலாட்டினால் வாலை ஒட்ட நறுக்கி விடுவேன்!

ஆண்டர்சனின் ஆட்கள் அவமானத்தோடு அடிபட்டவனை கைததாஙகலாக தூக்கிச் சென்றார்கள்.
ஆ...! என் கை போச்சு!


நடந்ததை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தவர்கள் குதூகலத்துடன் டானை நெருங்கினார்கள்.
புதிய செரீப் வாழ்க...!
இனி இவாதான எங்களுககு செரீப்...!
எந்த கொமபனும இனி எங்களிடம வாலாட்ட முடியாது.

அதற்குள் ஆண்டர்சன் கூட்டத்துககு ஏற்பட்ட அவமானத்தை கிறிஸ்டோபர் கேள்வப்பட்டு கொதிப்படைந்து போய் தன் ஆட்களை அரிமலாவுக்கு அனுப்பினான்.
டான் அரிமலாவில் கிறிஸ்டோபரின் ஆட்களை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

அடுத்த அரை மணியில்-
செரீப்...! கிறிஸ்டோபரின் கூட்டம் வந்துகொண்டிருக்கிறது! அனைவரும் கையில் துப்பாக்கி களுடன் ஆவேசமாக வந்து கொண்டிருக்கிறார்கள்!

செய்தியைக் கேள்விப்பட்ட டான் உடனே செரீப் அலுவலகத் துக்கு ஓடினார்.
அவர்களுக்கு சரியான பாடம் கற்பிக்கிறேன்!

டான் அலுவலகத்துக்குள் வந்து துப்பாக்கியை எடுத்து குண்டுகளை நிரப்பினார்.
நான் இங்கு இருக்கக கூடாது. எதிர் வீட்டு கூரையில் பதுங்கிக்கொள்ள வேண்டியதுதான்!

அதேநேரம்– கிறிஸ்டோபரின் ஆட்கள் செரீப் அலுவலகத்துக்கு முன வநது நின்றுகொண்டிருந்தார்கள்.
இங்கேதான் அவன் இருக்க வேண்டும்! உயிரோடு விடக்கூடாது!
ஒருவன் கையில் தீப்பந்தத்துடன் ஆவேசமாக கத்திக்கொண்டிருந்தான்.


அதேநேரம்– செரீப் டான் எதிர் வீட்டுக் கூரையில் பதுங்கி அவர்களை குறி பார்த்துக்கொண்டிருந்தார்.
டேய்...! வாங்கடா...!

திடீரென்று குண்டுகள் சரமாரியாக வந்தன.
ஆ...!
டுமீல்...!
அய்யோ...!

டேய்! ஆட்டுக்காரர்...! மறைந்து இருந்தா தாக்குகிறாய்... வெளியில் வாடா. உன் உடம்பை சல்லடை சல்லடையாக துளைத்துவிடுகிறேன்...
அதற்கு அவசியம் இல்லை முட்டாளே! இப்போது பார்...!
ஆ...!
டுமீல்...!


வந்தவர்கள் டானின் தாக்குதலை சமாளிக்கமுடியாமல் சிதறி ஓடினார்கள
டுமீல்...!
ஓடுங்கடா! இனி ஒருமுறை உங்களை இங்கே பாாத்தேன். சுட்டுக் கொன்றுவிடுவேன் ஜாக்கிரதை!

ஆண்டர்சனின் கூட்டத்தினர் நேராக ஆண்டர்சனிடம் வந்து முறையிட்டார்கள்.
பாஸ்...! அவனை நம்மால் வெல்ல முடியாது! எங்களை மன்னித்துவிடுங்கள். நாங்கள் வேறு பண்ணைக்குச் சென்று நேர்மையாக உழைக்கப் போகிறோம்...!

டேய்...! நில்லுங்கள். பணம் வேண்டுமானால் அதிகம தருகிறேன்! என்னைவிட்டுப் போகாதீர்கள்...!
ஆண்டர்சனின் ஆட்கள் ஆண்டர்சனை தனியே தவிக்க விட்டுவிட்டுப் போனார்கள்.

கிறிஸ்டோபரின் பண்ணையில்–
பாஸ்...! அந்த ஆட்டுக்காரன் எத்தனுக்கு எத்தனாக இருக்கிறான். நம் ஆட்களை ஓட ஓட விரட்டி விட்டான்!

பத்து ஆயிரம் ரூபாய் தருகிறேன். அவன் கதையை முடித்து விடுங்கள்!
எங்களை மன்னித்து விடுங்கள்! இனி நாங்கள் தவறு செய்யமாட்டோம்!

போங்கடா...! அந்த ஆட்டுக்காரன் கதையை நானே பார்த்துக் கொள்ளுகிறேன்!
கிறிஸ்டோபரையும் தனியாக விட்டுவிட்டு அவன் கூட்டத்தினர் பிரிந்து போனாாகள்.
அரிமலாவில் டான் செரீப் பதவியை ஏற்றுக்கொண்டதில் இருந்து நகரம் முழுக்கவே மாறி இருந்தது.
பள்ளி தொடர்ந்து நடைபெற்றது. ஜெசிதான் பள்ளிக்கு ஆசிரியையாக இருந்தாள்.
நமக்கு புதிய செரீப் வந்துவிட்டார்! இனி நீங்கள் பயப்படாமல் பள்ளிக்கு வர வேண்டும்!

ஆகா...! நான் பெரிய்வன் ஆனதும் செரீப் ஆகப்போகிறேன்!
நான் செரீப் மாதிரி வீரனாகி எதிரிகளை பந்தாடுவேன்!
அப்போது செரீப் டான் பள்ளிக்கு வந்தார்.

அலோ ஜெசி! பள்ளி எப்படி நடக்கிறது?
எல்லாம் நல்லபடியாக நடக்கிறது! நீங்கள் வந்த பிறகுதான் நகரமே களை கட்டத் தொடங்கி யிருக்கிறது!

உங்கள் ஆடுகளை எல்லாம் இழந்துவிட்டு எங்களுக்காக துன்பப்படுகிறீர்களே...!
சீசரும் மற்ற நாய்களும் என்ன ஆனது என்று தெரிவில்லை
பிரின்சை தவிர மற்றவை எல்லாம் ஓடிவிட்டன அல்லவா?
ஆமாம்! இப்போது அவைகள் எங்கே அலைந்து கொண்டிருக் கின்றனவோ தெரியவில்லை!
அதேநேரம்– அரிமலாவில் இருந்து 20 மைல் தொலைவில் சீசரும் மற்ற நாய்களும் பழிவாங்கும் வெறியோடு கிறிஸ்டோபரின் கூட் டத்தை தேடி அலைந்துகொண்டிருந்தன

சீசர் தன்னுடைய மோப்ப சக்தியால் கிறிஸ்டோபரின் கூட்டத்தை தேடி முன்னேறிக் கொண்டிருந்தது.
சீசரின் முகத்தில் பழிவாங்கும் வெறி பயங்கரமாக இருந்தது. முகமே ஜிவுஜிவுவென்று சிவப்பேறிப் போயிருந்தது.

அதேநேரம்— ஆண்டர்சன் தனிமையில் விடப்பட்டதும், தன் பழைய நண்பன் கிறிஸ்டோபரைத் தேடி குதிரையில் விரைந்தான்

என்ன ஆண்டர்சன்? ரொம்ப நாளைக்கு அப்புறம் என்னைத் தேடி வந்திருக்கிறாய்!
அவசரமாக உன்னிடம் பேசவேண்டும்!
கிறிஸ்டோபர்! ஆபத்து நம்மை நெருங்கிவிட்டது! நாம் உடனே அரிமலாவுக்கு சென்று நாம் யார் என்று காட்ட வேண்டும்!
ஏன்?
திய செரீப் வந்தவுடன் அவர்களுக்கு குளிர்விட்டுப் போச்சு! நம் மீது இருந்த பயம் தெளிந்து விட்டது!

அதனால் நாம் உடனே அரிமலாவுக்குச் சென்று அந்த செரீப்பின் கதையை முடிக்க வேண்டும்!
KK
அருமையான யோசனை! வா புறப்படலாம்!
மூன்று நாளுக்குப் பிறகு அரிமலாவில்-
ஜெசியை நான் திருமணம் செய்துகொள்ளுகிறேன் என்றால் சம்மதிப்பாளா?
அப்போது-
செரீப்! ஆண்டர்சனும், கிறிஸ்டோபரும் உங்களை கொல்லுவதற்காக மதுக் கடையில் காத்திருக்கிறார்கள்...
பீட்டர் வந்து செய்தி சொன்னான்.

உடனே செரீப், எதிரிகளை நேருக்குநேர் சந்திக்க மதுக்கடைக்கு விரைந்தான்.
டான்... எச்சரிக்கை! அவர்கள் இருவரும் நல்லபாம்பு மாதிரி!

டான் சிங்கம் போல மதுக்கடைக்குள் நுழைந்தான்.
இதோ பார்! இவன்தான அந்த செரீப்!
இவனா? இவன் சாதாரண ஆடு மேய்ப்பவன்தானே! எப்படி செரீப் ஆனான்!
உங்களுக்கு ஏன்ன வேண்டும்?

முட்டாள் ஆட்டுக்காரா!
நாங்கள் உன்னை
கொல்ல வந்திருக்
கிறோம்!
இருவரும் துப்பாக்கியை எடுத்தார்கள்.

உடனே டானும் துப்பாக்கியை
எடுத்தான். அதற்குள–
டேய்...! நீ
இத்தோடு காலி!
இந்தா
வாங்கிக்கொள்!

ஆண்டர்சனின் துப்பாக்கிக் குண்டுகள் செரீப்பின் துப்பாக்கிளை பறித்தன.
முதல் குண்டு உன் துப்பாக்கிகளுக்கு. அடுத்தது உன் உடலுக்கு. சாக தயாராக இரு...!
டுமீல்...!


அதேநேரம்— சீசரும் மற்ற நாய்களும் மோப்பம் பிடித்துக் கொண்டே மதுககடைக்குள் ஆவேசமாக நுழைந்தன.
லொள்...!
லொள்...!
லொள்...!

நாய்கள் வந்த வேகத்தில் ஆண்டர்சன், கிறிஸ்டோபரின் மீது பாய்ந்து கடித்துக் குதறின. தங்கள ஆடுகளை கொன்றவர்கள் இவர்கள்தான் என்றதால் இருவரையும் கதற கதறக் கடித்துக் குதறியது
வேண்டாம்! எங்களை விட்டுவிடு!
ஆ... அம்மா...!

பரவாயில்லை சீசர்! சரியான நேரத்துக்கு வந்து என்னை காப்பாற்றி விட்டாய்! உண்மையில் நீங்கள்தான் உயிர் காப்பான் தோழர்கள்!

முடிவில்- ஆண்டர்சன், கிறிஸ்டோபர் செய்த கொடுமைகளுக்காக இருவரையும் தூக்கிலிட்டார்கள். அதன்பிறகு அரிமலா புத்துணர்ச்சியுடன் காணப்பட்டது. டான் மனதில் நினைத்தைப் போலவே ஜெசியை மணந்துகொண்டு செரீப் பதவியை தொடர்ந்தான். அவனுடைய நாய்கள் சீசரும் மற்றதும் அரிமலாவுக்கு காவலாக இருந்தன
KK
(முடிந்தது)

அடுத்த காமிக்ஸ்
முகமூடிவீரர்
மாயாவி
தோன்றும்
மாயமாக மறைந்த விமானம்
காணாமல் போன விமானங்களை கண்டு பிடிக்க
வருகிறார் மாயாவி
படிக்கத் தவறாதீர்கள்!
ஆகஸ்டு 16-ந்தேதி வெளிவருகிறது!
"ராணி காமிக்ஸ்",
சென்னை-600 007